முருகப்பெருமான் துணை

**மகான் நாதாந்தச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.12.2022, புதன்கிழமை

1. சற்குருவாய் சகலருக்கும் அருளிட
சன்மார்க்க நெறிதனை படைத்து
அற்புதமாய் அருளும் அரங்கனே
அரசனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தேள்திங்கள்
குறைவிலா எழுநான்கு திகதி புந்திவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 28 ம் நாள் 14.12.2022, புதன்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
தேசிகனுக்கு நாதாந்தச்சித்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை பலம் அறிந்து உயர
ஞானவான் காட்டும் மேலான
ஞானவழிகளை ஏற்றுச் செயல்பட
4. செயல்பட செயல்கள் சிறக்கும்
சேவைகளாக உயர்ந்து நன்கு
தயவான வாழ்வு கொண்ட
தனித்துவமிக்க மக்களாய் மாறுவர்
5. மாறுவர் ஞானிகள் ஆசியும்
மரணம் வெல்லும் பலமும்
ஆறுதலும் துணையும் கூடி
அரங்கனால் தேற்றம் பெறுவர்
6. தேற்றமோடு வாழும் காலமே
தேசிகனின் தேடல் மூலமாக
ஆற்றல் கூடி ஞானிகள் ஆவர்
அகிலம் காக்கும் சக்திகளாவர்
7. சக்திமிகு அரங்கன் உபதேசம்
சடாட்சரனின் ஞானம் ஆகும்
பக்திபட தீட்சையாக ஏற்க
பாமரனும் ஞானிகளாக மாறுவர்
8. ஆகவே இந்த மாற்றத்தை
ஆறுமுகனார் வெளிப்பாடாக
செகமெங்கும் அரங்கன் நடத்திட
சேவைக்கென வந்து கலந்த
9. கலந்த மக்களெல்லாம் ஞானிகளாக
களம் கண்டு நிலை தேறி
வளம் கொண்ட தேசமாகவே
வையகத்தை மாற்றி இனிதே

10. இனிதே ஞானத் தலைமையும்
இனி மக்களை பாதுகாக்கும்
கனிவேலவன் ஆட்சியுமாகவே
கலியுகத்தில் மாற்றம் புரிவர்

11. மாற்றம் தரும் அரங்கமகானே
மண்ணுலகை மீட்கும் காக்கும்
ஆற்றல்மிக்க முருகப்பெருமான் அவதாரம்
அனுகிட அனுகூலம் பெற்று நிலைப்பர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–